People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்
1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-02
# 08.02.2009 முதல் 14.02.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 73. | 08.02.09 | **மதுரை மாவட்டம் :** கருப்பாயூரணியை சேர்ந்தவர் மாரிமுத்து கடை போட்டு வடை வியாபாரம் செய்து வருகிறார். இவரது மனைவி மகாலட்சுமி (29) மகாலட்சுமியின் தந்தை சந்தானம் இவரது கடையில் வேலை பார்த்து வந்தார். சம்பவத்தன்று கடையில் திருட்டு போனது மாரிமுத்து மாமனார் மீது சந்தேகப்பட்டார். மகாலட்சுமி தன் தந்த மீது திருட்டு பட்டம் சூட்டியதால் மனம் நொந்து விசம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். | பெண்கள் மீதான வன்முறை | மாலைமலர் |
| 74. | 08.02.09 | **சிவகங்கை மாவட்டம் :** ஊத்துக்கோட்டை அருகே உள்ள பாராச்சி கிராமத்தைச் சேர்ந்தவர் சுந்தரமூர்த்தி இவரது மகள் சோமசுந்தரி (18) இவரை அதே ஊரைச் சேர்ந்த வினோத்குமார் வழி மறித்து பலாத்காரம் செய்து சுந்தரியை கத்தியால் குத்தியுள்ளார். இது குறித்து ஊத்துக்கோட்டை போலீசார் வழக்கு பதிவு. | பெண்கள் மீதான வன்முறை | மாலைமலர் |
| 75. | 08.02.09 | **மதுரை மாவட்டம் :** திருமங்கலம் அருகே உள்ள சிந்துபட்டி போலீஸ் சரகம் சந்தைப்பேட்டையை சேர்ந்தவர் தங்கம்மாள் (38) இவருக்கு கண் பார்வை கிடையாது. இவரை அதே ஊரைச் சேர்ந்த ராமன் (54) தங்கமாளை மானபங்கம் செய்ய முயற்சி செய்ய முயன்றதாக சிந்துப்பட்டி போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 76. | 08.02.09 | **இராமநாதபுரம் மாவட்டம் :** முதுகுளத்தூர் அருகே உள்ள காக்கூரை சேர்ந்தவர் ராஜலட்சுமி. இவரது அக்காள் மகன் பழனிகுமார் போலீசாராக பணியாற்றி வருகிறார். தனது சொந்த இடத்தில் ரூ. 3 லட்சம் மதிப்புள்ள மணலை திருடியதாக மதுரை ஐகோர்ட்டில் புகார். | | தினத்தந்தி |
| 77. | 08.02.09 | **மதுரை மாவட்டம் :** ஜவஹர்புரத்தைச் சேர்ந்தவனர் மாரி (43) இவரது பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர் சக்திவேல் சேகர் இவர்கள் இருவரும் மாநகராட்சியர் துப்புரவு தொழிலாளராக பணி புரிகிறார். வீட்டுக்கு அருகே உள்ள காலி நிலத்தை பயன்படுத்துவது தொடர்பாக பிரச்சனையில் 2 பேரும் மாரியை தாக்கினார். இது குறித்து தல்லாகுளம் போலீசார் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 78. | 08.02.09 | **கன்னியாகுமரி மாவட்டம் :** மார்த்தாண்டம் அருகே தீக்குறிச்சி பள்ளத்தைச் சேர்ந்தவர் வர்கீஸ் (50) இவரின் மனைவி ரோஸ்லி (43) இவர்களுக்கு மூன்று பிள்ளைகள். வர்கீசு மனநிலை பாதிக்கப்பட்டவர். தன் மனைவியை கடப்பாறை கம்பியால் தாக்கி கொன்று விட்டு தானும் தற்கொலை செய்ய முயற்சி. இதுக் குறித்து குழித்துறை காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | |

| | | | | |
|---|---|---|---|---|
| 79. | 09.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** சங்கரன்கோவில் தாலுகா, திருவேட்டநல்லூர் கிராமம், சண்முகசுந்தரம் என்பவரை சேர்ந்த மரம் காவல் நிலையத்தினர் பொய் வழக்கு போட்டு சிறையிலடைப்பு. | காவல் நிலைய வன்முறை | |
| 80. | 09.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** தென்கலம்புதூர் கிராமம் சித்ராதேவி என்ற பெண்ணை அவரது கணவர் கண்ணன் ஜீவனாம்சம் கொடுக்க உத்தரவிட்டும், ஜீவனாம்சம் கொடுக்கவில்லை. | பெண்கள் மீதான வன்முறை | |
| 81. | 09.02.09 | **மதுரை மாவட்டம் :** திருப்பரங்குன்றம் நிலையூரைச் சேர்ந்தவர் ஹைதர் அலி. இவர்மதுரை சென்டரல் மார்கெட்டில் இலை வியாபாரம் செய்கிறார். இவரை திலகர்திடல் காவல் நிலைய காவலர் பாண்டி (33) வழிமறித்து இவர் கையில் இருந்த 4500 ரூபாயை பறித்து விட்டு அடித்து சித்திரவதை செய்தனர். | காவல் நியைலச் சித்திரவதை | |
| 82. | 09.02.09 | **இராமநாதபுரம் மாவட்டம் :** பரமக்குடி அடுத்த மாலகாவனூர் மணல் திருட்டைக் காட்டி கொடுத்ததாக கூறி ஓராண்டுக்கு மேலாக நாதன் (35), ஜோசப் (35) ஆகிய இருவர் குடும்பத்ினரை ஊரை விட்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக அவர்களுடைன் பேசுவோருக்கு ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. | | |
| 83. | 09.02.09 | **ஈரோடு மாவட்டம் :** பவானி அருகே குருப்பநாய்கன் பாளையத்தில் உள்ள ரேசன் கடை முறைக்கேட்டை கண்டித்து அப்பகுதி பெண்கள் திடீர் சாலை மறியல். | | பெருமாள் RMA |
| 84. | 09.02.09 | **ஈரோடு மாவட்டம் :** பெருந்துறை அருகே சுள்ளிபாளையம் கிராம ஆதிதிராவிடர் காலனியைச் சேர்ந்தவர் இலவல வீட்டு மனை நிலத்தில் குடிசை அமைத்தவர்களை அருகில் உள்ள நில உரிமையாளர் தடுத்ததால் கலெக்டருக்கு புகார் மனு. | தலித்துகள் மீதான வன்முறை | பெருமாள் RMA |
| 85. | 09.02.09 | **கோவை மாவட்டம் :** உடுமலை கேர்மங்கலம் குப்பிச்சிப்புதூரைச் சேர்ந்தவர் ரங்கன் (32) கூலி தொழிலாளி. இவரது மனைவி மஞ்சுளா (22) இவரதுமகன் கவியரசன் 11 மாத குழந்தை மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையில் ரங்கன் தன் 11 மாத குழந்தையை தரையில் அடித்து கொன்றார். இது குறித்து கோமங்களம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | பெருமாள் RMA |
| 86. | 09.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** கிருஷ்ணாபுரத்தில் முப்பிடாது அம்மன் கோயில் பிரச்சனை தொடர்பாக 300 பெண்கள் உட்பட ஆயிரத்துக்கு மேற்பட்டோர் திரண்டு வந்து கடையநல்லூர் போலீசி நிலையத்தை முற்றுகை. | காவல் வன்முறை | கணேசன் RMA |
| 87. | 09.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** கோவில்பட்டி இ.பி காலனியைச் சேர்ந்த பாலசுப்ரமணியன் மகன் அய்யப்பன் (32), மருந்து கடை நடத்தி வந்த இவருக்கும் என்.ஜி.ஒ காலனியைச் சேர்ந்த கற்பகவள்ளி என்பவருக்கும் கடந்த 99ம் ஆண்டு திருமணம் நடந்தது. திருமணத்தின் போது 40 பவுன் | பெண்கள் மீதான வன்முறை | கணேசன் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நகை, 40 ஆயிரம் வரதட்சணையாக கொடுக்கப்பட்டது. கடை நஷ்டமானதால் மனைவியிடம் பெற்றோர் வீட்டில் இருந்து ரூ. 2 லட்சம் வாங்கி வரும்படி துன்புறுத்தியுள்ளார். இது குறித்து சங்கரன்கோவில் காவல் நிலையத்தில் புகார். | | |
| 88. | 09.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** புளியங்குடி மேட்டுத்தெருவைச் சேர்ந்த மைதீன் மனைவி ரமீனியா (37) பக்கத்து வீட்டை சேர்ந்த கருத்தபாண்டி மகன் செந்தில்குமார் (30) பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றார். இது குறித்து புளியங்குடி போலிசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | கணேசன் RMA |
| 89. | 09.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** சென்னையில் மைலாப்பூரைச் சேர்ந்தவர் கனிராஜா. பி.எஸ்.என்.எல் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார்.இவரது மனைவி மனோன்மணி (43) சென்னையில் ஒரு பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றி வந்தார். திடீரென மர்மமான முறையில் இறந்தார். இது குறித்து தென்காசி காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | கணேசன் RMA |
| 90. | 09.02.09 | **இராமநாதபுரம் மாவட்டம் :** இராமநாதபுரம் அருகில் கல்லூரரணி என்ற இடத்தில் உள்ள கூட்டுறவு வங்கியில் சரவணன் (33) என்பவர் பணிபுரிந்து வருகிறார். இவருடைய பொறுப்பில் உள்ள கல்,?????? | மோசடி | |
| 91. | 11.02.09 | **கிருஷ்ணகிரி மாவட்டம் :** பாலியல் தொல்லைகளுக்கு உள்ளான பெண் ஊழியர்கள் புகார் கொடுத்தாலும் சுகாதார துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை. | பெண்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 92. | 11.02.09 | **மதுரை மாவட்டம் :** திருமங்கலம் அருகே மேலஉப்பிலிக்குண்டு கிராமத்தைச் சேர்ந்தவர் பாலமுருகன் (25) கொத்தனார் வேலை செய்து வருகிறார். இவரது மனைவி பூமாரி (19) இவர்களுக்கு திருமணமாகி 7 மாதங்களுக்கு முன் திருமணம் நடைபெற்றது. இவரது மாமியார் மருதாயி தொடர்ந்து கொடுமை செய்து அடித்து துன்புறுத்தி மண்ணெணைய் ஊற்றி தீ வைத்துள்ளார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி பூமாரி இறந்தார். இது குறித்து கூடக்கோவில் காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 93. | 11.02.09 | **மதுரை மாவட்டம் :** நாகமலைப்புதுக்கோட்டையைச் சேர்ந்தவர் பெயின்டர் செல்வம். இவரது மகள் 13 வயது சிறுமி, மகன் பன்னீர்செல்வம் (11) தும்மக்குண்டைச் சேர்ந்தவர் ஸ்ரீராம். ராஜாமணியின் உறவினரான இவர் குஜராத்தில் முறுக்கு வியாபாரம் செய்கிறார். வறுமையின் காரணமாக 13 வயது மகளையும், மகன் பன்னீர்செல்வத்தையும் முறுக்கு தொழிலுக்காக ஸ்ரீராமுடன் குஜராத்திற்கு செல்வம் அனுப்பினார். அங்கு இரு குழந்தைகளும் கொத்தடிமைகள் ஆக்கப்பட்டனர். பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டனர். இது குறித்து நாகமலைப் புதுக்கோட்டை போலீசில் புகார். இது தொடர்பாக ஐகோர்ட் இரு குழந்தைகளையும் பள்ளியில் சேர்க்க | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தரவிட்டது. | | |
| 94. | 11.02.09 | **இராமநாதபுரம் மாவட்டம் :** பரமக்குடி அருகே உள்ள அரியனேந்தல் என்ற சிற்றூரைச் சேர்ந்த இவர் சண்முகவேல் (28) இவரின் மனைவி கோமதி (22) இவர்களுக்கு இரண்டு குழந்தைகள். மனைவியிடையே ஏற்பட்ட குடும்ப தகராறு காரணமாக கோமதி தன் இரண்டு குழந்தைகளையும் கொன்று விட்டு தானும் தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து பரமக்குடி காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 95. | 11.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** களக்காடு அருகே மேலதேவநல்லூர் வேலவன் குடியிருப்பைச் சேர்ந்தவர் தங்கதுரை (58) குடிப்பழக்கமுள்ள இவர் குடித்து விட்டு வந்து அடித்ததால் இவர் மனைவி பொன்மணி இவரை விட்டு பிரிந்து வாழ்கிறார். சினமடைந்த தங்கதுரை துப்பாகியை காட்டி கொலை மிரட்டல். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 96. | 11.02.09 | **மதுரை மாவட்டம் :** மதுரையைச் சேர்ந்தவர் விஜி (26) இவர் கோவையில் உள்ள பிரபலமான கல்லூரி ஒன்றில் பி.எஸ்.சி கம்யூட்டர் சயின்ஸ் படித்தார். அப்போது சேலத்தைச் சேர்ந்த சரவணன் என்பவரை இன்டர்நெட் சார்ட்டிங் மூலம் காதலித்து தனது காதலன் திருமணம் செய்ய மறுக்கிறார் என்று தன் காதலன் வீட்டு முன்பு தர்ணா. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 97. | 11.02.09 | **மதுரை மாவட்டம் :** உசிலம்பட்டி டி.பி ரோட்டை சேர்ந்தவர் பழனிச்சாமி. இவரது மகள் கனகவள்ளி (16) என்பவர் சட்டீஸ்கர் மாநிலத்திற்கு கடத்தி செல்லப்பட்டு கண்டுப்பிடிக்கப்பட்டு போலீசுக்கு ஐகோர்ட் கிளை உத்தரவு. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்ஓசை |
| 98. | 11.02.09 | **தேனி மாவட்டம் :** தேனி அல்லிநகரைச் சேர்ந்த அழகு ரத்தினம். இவரது மகள் திவ்யாபாரதி. தேனி மதுரை ரோட்டில் நகை கடை ஒன்றில் வேலை பார்த்து வந்தார். நகை கடை உரிமையாளர் உள்பட 3 பேர் சேர்ந்து ஆட்டோவில் கடத்தி சென்று தவறாக நடந்து கொண்டுள்ளனர். திவ்யாபாரதி மற்றும் அவரது தாயாருக்கும் பாதுகாப்பு வழங்க உயர்நீதிமன்ற கிளை உத்தரவு. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்ஓசை |
| 99. | 11.02.09 | **மதுரை மாவட்டம் :** கள்ளிக்குடி வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்தவர் மதுரை மகன் முத்துகுமரன் (28) அதே ஊரைச் சேர்ந்தவர் பாண்டியம்மாள் இருவரும் காதலித்து வந்தான். முத்துகுமாரின் தாய் மருதாயி முத்துக்குமாருக்கு வேறு இடத்தில் பெண் பார்க்க முன் வந்தனர். பாண்டியம்மாள் மற்றும் 5 பேர் சேர்ந்து மருதாயியை தாக்கினர். இது குறித்து கள்ளிக்குடி காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்ஓசை |
| 100. | 11.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** வந்தவாசி வட்டம் வயலூர் கிராமம் சேர்ந்தவர் மண்ணு. இவர் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர் ஆதிக்க சாதியைச் சேர்ந்த வன்னியர் ஆறுமுகம் இவரை பொது இடத்தில் சாதி பெயர் சொல்லி அழைத்தும், அடித்து சித்திரவதை | தலித்துகள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்யப்பட்ட சம்பவம். | | |
| 101. | 11.02.09 | **தர்மபுரி மாவட்டம் :** தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த எம். ஜோதி, த/பெ. மாரியப்பன், 8ம் வகுப்பு படிக்கும் மாணவன் பெரியசாமி, த/பெ. கோவிந்தசாமி (எ) சேட்டு என்பவருக்கு இளம் வயதில் திருமணம் செய்ய திமுக மாவட்ட செயலாளர் தலைமையில் ஏற்பாடு. உடனடியாக தடுக்க கோரி மாவட்ட ஆட்சியரிடம் புகார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | செந்தில் RMA |
| 102. | 11.02.09 | **வேலூர் மாவட்டம் :** வாணியம்பாடி அடுத்த வீரணமலை பகுதியைச் சேர்ந்தவர் பூபதி லோகேஷ் (15) புதூரில் உள்ள தனியார் பள்ளியில் 10ம் வகுப்பு படிக்கிறார். செட்டியப்பனூரில் உள்ள சி.எம்.எஸ் ஹாஸ்டலில் தங்கியிருந்த இவர் அடிக்கடி வெளியே சென்று விடுவாராம். இதனை விடுதி வார்டன் கண்டித்ததில் மனமுடைந்து லோகேஸ் ரயில் தண்டவாளத்தில் தலை வைத்து தற்கொலைக்கு முயற்சி. இது குறித்து ரயில்வே போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பள்ளி வன்முறை | பாஸ்கர் RMA |
| 103. | 11.02.09 | **வேலூர் மாவட்டம் :** ஜோலார்பேட்டை அடுத்த பெரிய பொன்னேரியை சேர்ந்தவர் கிருஷ்ணன் இவரது மகன் பழனி (25) இராணுவ வீரர் இவருக்கும் பாச்சல் புளியங்கொட்டு சேட்டு மகள் அனிதா (19) என்பவருக்கும் 3 மாதத்திற்கு முன்பு திருமணம் நடந்துள்ளது. திருமணம் முடிந்த குறுகிய காலத்திற்கு அழகன் இராணுவத்திற்கு சென்று விட்டார். அனிதாவை மாமனார் கிருஷ்ணன் மற்றும் மாமியார் சித்திரவதை செய்துள்ளார். இதனால் மனமுடைந்த அனிதா மின் விசிறியால் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |
| 104. | 11.02.09 | **வேலூர் மாவட்டம் :** வாணியம்பாடி அடுத்த கொல்லப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த திருஞானம் இவரது மனைவி ரகுணா (22) அதே பகுதியைச் சேர்ந்தவர் செந்தில் (26) திருஞானம் செந்தில் இருவரும் நண்பர்கள். திருஞானம் வீட்டில் இல்லாத நேரத்தில் செந்தில் ரகுணாவிடம் தவறாக நடக்க முயற்சி. இது குறித்து அம்பலூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |
| 105. | 11.02.09 | **வேலூர் மாவட்டம் :** வேலூர் அடுத்த அலமேலு ரங்காபுரம் அழகிரி நகரைச் சேர்ந்தவர் சேகர். இவரது மகள் வித்யா (4). இவரை அதே பகுதியைச் சேர்ந்த ஜெயவேலு என்பவர் கடத்திச் சென்று கட்டாய திருமணம் செய்து கொள்ள முயற்சி. சத்துவாச்சாரி காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |
| 106. | 11.02.09 | **வேலூர் மாவட்டம் :** தொரப்பாடி கம்பர் நகரைச் சேர்ந்தவர் அண்ணாமலை. இவரது மகள் காயத்ரி (21) தொரப்பாடி ஜீவாநகரை சேர்ந்தவர் சீனு (எ) சீனிவாசன் (25) இருவரும் காதலித்து வந்தனர். காயத்ரி சீனுவை திருமணம் செய்துக் கொள்ளுமாறு | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வற்புறுத்தினார். சீனு மறுத்ததால் காயத்ரி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து வேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | | |
| 107. | 11.02.09 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி அடுத்த சின்னப்பள்ளிக்குப்பம் கிராமத்தில் உள்ள அகதிகள் முகாமைச் சேர்ந்தவர் ரவீந்திரன் (38). இவர்களுக்கு மனைவி கமலா (38) இவர்களுக்கு 3 பெண் குழந்தைகள் கணவன் மனைவி தகராறில் கமலா கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டார்.இது குறித்து உமராபாத் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |
| 108. | 11.02.09 | **வேலூர் மாவட்டம் :** ஒடுகத்தூர் அருகே நள்ளிரவு நடந்த சோதனையில் 3.3 டன் ரேசன் அரிசி லாரியை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். | ரேசன் அரிசி கடத்தல் | பாஸ்கர் RMA |
| 109. | 11.02.09 | **வேலூர் மாவட்டம் :** அரக்கோணம் அடுத்த சித்தேரி மேல்கண்டிகை வினாயகர்கோவில் தெருவைச் சேர்ந்தவர் ஆறுமுகம்.இவரது மகள் உமாமகேஸ்வரி (22) இவருக்கும் ரமேஷ் என்பவருக்கும் 2005ல் திருமணம் நடைபெற்றது. இந்நிலையில் உமாமகேஸ்வரி சமையல் செய்யும் போது ஸ்டவ் வெடித்து இறந்தார். இது குறித்து அரக்கோணம் தாலுகா போலீஸ் ஸ்டேசனில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |
| 110. | 11.02.09 | **வேலூர் மாவட்டம் :** அப்துல்லாபுரம் அருகே உள்ள செம்பேடு ஊராட்சி நடுநிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வரும் மாணவன் அஜீத் மற்றும் நான்கு மாணவர்கள், பள்ளி இடைவேளையின் போது எதிரே உள்ள பொதுக் குழாய்க்கு சென்றார். அங்கிருந்த வேலு (47) என்பவர் அஜீத்தை அடித்துள்ளார். அதனை தட்டி கேட்ட தலைமை ஆசிரியர் சபீதாபாயை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார். இது குறித்து வாஞ்சிபுரம் காவல் நிலையத்தில் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |
| 111. | 11.02.09 | **வேலூர் மாவட்டம் :** ராணிபேட்டை தோல் தொழிற்சாலையில் விஷ வாயு தாக்கியதில் மூச்சடைத்து ராணிப்பேட்டை காரையைச் சேர்ந்த ஜெயசங்கரன் (29) இறந்தார். மணி மற்றும் சந்திரன் இருவரும் படுகாயம். | சுற்றுசூழல் மாசு | பாஸ்கர் RMA |
| 112. | 11.02.09 | **வேலூர் மாவட்டம் :** வந்தவாசி அடுத்த கீழ்புத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ஜெயராமன் (50) விவசாயி இவரது மனைவி ஆண்டாள் (45) இவர்களுக்கும் கதிரேச ராமானுஜதாஸ் என்பவருக்கும் ஏற்கனவே இருந்த முன் விரோதம் காரணமாக ஜனவரி 30ல் ராமானுஜதாஸ் அவரின் தம்பி பார்த்திபன் (48) மதன் சாரலன் (25) ஆகியோர் ஆண்டாளை ஆபாசமாக திட்டி அடித்துள்ளனர். இது குறித்து பொன்னூர் போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |
| 113. | 11.02.09 | **வேலூர் மாவட்டம் :** வந்தவாசி அடுத்த ஆணையோகியைச் சேர்ந்த முனுசாமி மனைவி தவமணி (35) இவர்களுக்கும், அதே பகுதியை சேர்ந்த | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெருமாள் மகன்கள் ஆனந்தன், தியாகராஜன் ஆகியோக்கும் இடையே இருந்த முன் விரோதத்தில் தவமணியை ஆனந்தன், தியாகராஜன் அடித்து உதைத்து கொலை மிரட்டல் விடுத்தனர். இது குறித்து வடவணக்கம்பாடி போலீசில் 24.01.09ல் தவமணி புகார். | | |
| 114. | 11.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** தி.மலை செங்கம் அடுத்த கன்னக்குருக்கை கிராமத்தைச் சேர்ந்த அண்ணாமலை மகள் ஷகிலா (18) மற்றும் அவருடைய தோழி சரிதா (18) இருவரும் குடும்ப பிரச்சனை காரணமாக கிணற்றில் விழுந்து தற்கொலைக்கு முயன்ற போது ஷகிலா மின்சாரம் தாக்கி இறந்து விட்டார். சுசிதா சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார்.இது குறித்து வி.ஏ.ஓ பாய்ச்சல் போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |
| 115. | 11.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** தி.மலை அடுத்த பெரியபாளிப்பட்டு கிராம்தை சேர்ந்த சின்னதம்பி (35) மனைவி பாரதி. மகள் சீதா (7) ஆகியோர் ஓம் சக்தி கோயில் திருவிழாவிற்கு சென்ற போது அதே கிராமத்தை சேர்ந்த சின்னகண்ணு மகன் சேட்டு (24) பாரதியை கேலி கிண்டல் செய்துள்ளார். அதை தட்டி கேட்க சென்ற சின்னதம்பியுடன் சண்டை போட்ட போது சிறுமி சீதா மீது கொதிக்கும் பாயாசத்தை ஊற்றியுள்ளார். இது குறித்து. தி.மலை போலீசில் புகார் | குழந்தைகள் மீதான வன்முறை | |
| 116. | 11.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** தி. மலை அடுத்த வீரசம்பனூர் கிராமத்தை சேர்ந்தவர் பாக்கியராஜ் (28). இவரது மனைவி ரோசினி (25) இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில் ரோசினியின் தங்கை ஷீலாவுக்கும், பாக்கியராஜூக்கும் கள்ளக் காதல் ஏற்பட்டு அவரை 2ம் திருமணம் செய்ய முயன்றதால் ரோசினி விஷம் குடித்து தற்கொலை முயற்சி. இது குறித்து சேத்துபட்டு காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | |
| 117. | 11.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** ----------பாடி கிராம்தைச் சேர்ந்தவர் ஆனந்தன் (30). இவரது மனைவி செல்வி. இவர் தனது வீட்டில் நேற்று முன் தினம் தனியாக இருந்த போது பெரியகல்தாம்படியைச் சேர்ந்த குமார் செல்வி வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து ஆபாசமாக பேசி தாலி கட்டாமல் விட மாட்டேன் என மிரட்டியுள்ளார். இது குறித்து பாய்ச்சல் போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | |
| 118. | 11.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** கம்பங்காள்ளை சேர்ந்தவர் அப்துல்காதர் இவரது மனைவி பாத்திமா (31). அப்துல்காதருக்கு வேறு பெண்ணுடன் தொடர்பு இருந்ததால் கணவன், மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையில் பாத்திமா தன் உடலில் மண்ணெணைய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து தி.மலை டவுன் போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |
| 119. | 11.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** கொசமடத் தெருவைச் சேர்ந்தவர் கந்தன். கம்யூட்டர் சென்டர் | பெண்கள் மீதான | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடத்தி வருகிறார். இவரது மனைவி சரஸ்வதி (21). இவர்களுக்கு கடந்த 6 மாதங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது.இவரை ஒரு சிலர் திருமணமாகி 6 மாதமாகிறது ஏன் கருத்தரிக்கவில்லை என கேட்டதால் மனமுடைந்த சரஸ்வதி மண்ணெணைய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து திருவண்ணாமலை டவுன் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறார். | வன்முறை | |
| 120. | 11.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** சேத்துப்பட்டு அடுத்த கொத்தந்தவாடி கிராமத்தைச் சேர்ந்தவர் கிருஷ்ணமூர்த்தி. இவரது மனைவி தரணவி (30) இவர்களுக்கு சின்னதுரை (8), --------(7) ஆகிய 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். கிருஷ்ணமூர்த்தி சகோதரர்களுக்கு இடையே நிலம் பிரச்சனை தீராமல் இருந்து வந்தது. இதற்கிடையில் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு கிருஷ்ணமூர்த்தி இறந்து விட்டார். பாக பிரச்சனை தீரவில்லையே என்று விரத்தியில் தரணி தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். | பெண்கள் மீதான வன்முறை | |
| 121. | 11.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** செய்யாறு அடுத்த மேல்கொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர் கலா (19) இவரும் பக்கத்து வீட்டைச் சேர்ந்த மணி என்பவரது மகன் சத்தியராஜ் என்பவரும் காதலித்து வந்துள்ளனர். கலாவை திருமணம் ஆசைகாட்டி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். திருமணம் செய்ய முறத்துள்ளார். இது குறித்து செய்யாறு மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | |
| 122. | 11.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** செய்யாறு அடுத்த கீழ்நேத்தப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்தவர் விஜயரங்கன் விவசாயி. இவரது மனைவி காமாட்சி (25) இவருக்கும் ஜானகிராமன் என்பவருக்கு வாய் தகராறு???????????????? | | |
| 123. | 11.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** சிவகரி தாலுகா கே.வி பட்டினம் கிராமம், நடுவூர் ராமசாமிபுரம் தெருவைச் சேர்ந்தவ தலித் இளைஞர்கள் ராஜகோபால், முனீஸ்வரன், முருகன் ஆகிய மூனவரையும் வன காவலர் சிவஞானம் சாதி சொல்லி இழிவு பேசியும் அடித்து சித்திரவதை. | தலித்துகள் மீதான வன்முறை | |
| 124. | 11.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** பாளையங்கோட்டை வட்டம், முன்னீர்பள்ளம் அருகே தமிழாக்குறிச்சி தனியார் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் இளம் பெண்ணிடம் சில்மிஷம். | தலித்துகள் மீதான வன்முறை | |
| 125. | 12.02.09 | **மதுரை மாவட்டம் :** நேதாஜி சாலையைச் சேர்ந்தவர் ராமமூர்த்தி மகன் சுரேஷ் (330. இவருக்கும் மதுரை அருகே உள்ள பாலமேட்டைச் சேர்ந்த சாந்திக்கும் (33) 50 பவுன் நகைகள், ஒரு லட்சத்து 50 ஆயிரம் சீர்வரிசை உள்ளிட்டவை வரதட்சணையாக கொடுக்கப்பட்டது. இந்நிலையில் கூடுதல் வரதட்சணைக் கேட்டு சுரேஷ் மற்றும் அவரது | பெண்கள் மீதான வன்முறை | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குடும்பத்தினர் கொடுமைப்படுத்தியுள்ளனர். இது குறித்து மதரை நகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | | |
| 126. | 12.02.09 | **இராமநாதபுரம் மாவட்டம் :** இலங்கை தமிழருக்கு ஆதரவாக போராட்டம் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பாம்பன் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் மீண்டும் தாக்குதல் நடத்தினர். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 127. | 12.02.09 | **விழுப்புரம் மாவட்டம் :** உளுந்தூர்பேட்டை ஒன்றியத்தில் உள்ள கிளயூர் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முடிவெட்டும் கடைகளில் முடிவெட்ட தடை. | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 128. | 12.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** ரேஷனில் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி 50 ரூபாய்க்கு மளிகை வாங்கும் திட்டத்தில் சரியாக செயல்படுத்தாத மற்றும் செயல்படாத அதிகாரிகள் மற்றும் 21 பேர் சஸ்பெண்ட் செய்யட்டனர். | மோசடி | தினமணி |
| 129. | 12.02.09 | **சென்னை மாவட்டம் :** சென்னை புழல் காவல்கரையில் மினரல் வாட்டர் நிறுவனம் நடத்தி வருபவர் அப்சல்கலாம். இவரது நிறுவனத்தில் குடிநீர் சுத்திகரிப்பு செய்ய ஜெனரேட்டர் பொருத்து திட்டமிட்டார். அதற்கு மின்வாரியத்திற்கு அனுமதி பெற பொறியாளர் சங்கர் (43) என்பவரை ----- அனுமதி பெற 5000 ரூபாய் லஞ்சம் கேட்டதாக சங்கர் கைதுசெய்யப்பட்டார். | லஞ்சம் | தினமலர் |
| 130. | 12.02.09 | **சிவகங்கை மாவட்டம் :** திருப்பத்தூர் அருகே உள்ள ஆத்தங்கரைப்பட்டியைச் சேர்ந்த முருகன் மனைவி லட்சுமி (23) என்ற யமுனா தனியார் பிளாஸ்டிக் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார். அழகப்பன் என்பவர் லெட்சுமியை தவறாக பேசியுள்ளார். மற்றும் கம்பியால் லட்சுமியை தாக்கியுள்ளார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்ஓசை |
| 131. | 12.02.09 | **கன்னியாகுமரி மாவட்டம் :** திங்கள்சந்தை அருகில் உள்ள குருந்தன்கோடு செக்காரவிளையை சேர்ந்தவர் வினு, சதீஸ், ஆகியோர் -------- செய்ததாக தெரிகிறது. இதையறிந்த ஐயப்பனிடம் இது தொடர்பாக இரணியல் காவல் நிலையத்தில் முறையீடு செய்ததா????????? ஐயப்பனுக்கு அடி, உடை இது குறித்து ஆசாரிபள்ளம் போலீஸ் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிர்ஓசை |
| 132. | 12.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** வந்தவாசி அடுத்த பூங்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர் சோலை கூலி தொழிலாளி இவரது மகள் சிவகாமி (32) இவருக்கும் பர்வதம் பூண்டி கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணி மகன் எல்லையப்பன் (34) இவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகள். இந்நிலையில் கூடுதல் வரதட்சணைக் கேட்டு எல்லையப்பன் மற்றும் தயார் காசியம்மாள் சிவகாமியின் உடல் முழுவதும் சூடு போட்டு கொடுமைப்படுத்தியுள்ளனர். இது குறித்து தேசூர் போலீஸ் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை வரதட்சணை கொடுமை | பாஸ்கர் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| 133. | 12.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** ஆரணி அருகே களபூர் அருகே புலவன் பாடிதாங்கல் கிராமத்தைச் சேர்ந்தவர் பழனிவேல் (36). இவரது மனைவி மகேஸ்வரி இவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்தவ காசியம்மாளுக்கும் முன் விரோதம் காரணமாக பழனிவேல் காசியம்மாளை அடித்து கொலை செய்தார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |
| 134. | 12.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** சித்தவாசல் அடுத்த வெல்லூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ரஞ்சித்குமார் (23) விவசாயி. இவரது நிலத்திற்கு அருகே சுந்தரம் என்பவரது நிலம் உள்ளது. இவரது நிலத்தில் மனைவி புனிதா தனியாக நிலத்தில் இருந்த போது சுந்தரத்தின் மகன் சரவணன் பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சி. இது குறித்து தட்டிக் கேட்ட ரஞ்சித்குமாரை தாக்கியுள்ளார். இதுகுறித்து சித்தவாசல் காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |
| 135. | 12.02.09 | **கடலூர் மாவட்டம் :** கடலூரில் தனியார் மருத்துவமனையில் போதிய பராமரிப்பு இல்லாததால் விவசாயி இறந்ததாக கூறி அவரது உறவினர்கள் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். | | ஜெயராம் RMA |
| 136. | 12.02.09 | **விழுப்புரம் மாவட்டம் :** திருக்கோவிலூர் அருகேயுள்ள கல்லந்தல் கிராமத்தை சேர்ந்தவர் முருகையன். இவரது மகன் சசிக்குமார் (19) இவரும் அதே பகுதியைச் சேர்ந்த முருகேசன் மகள் வசந்தகுமாரி (19) என்வரும் கடந்த 5 ஆண்டுகளாக காதலித்து வந்தனர். திருமண ஆசை காட்டி சசிக்குமார் வசந்தகுமாரியை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். திருமணம் செய்ய மறுப்பு தெரிவித்துள்ளார். இது குறித்து திருக்கோவிலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | ஜெயராம் RMA |
| 137. | 12.02.09 | **விழுப்புரம் மாவட்டம் :** திருவண்ணைநல்லூர் அருகே சித்தலிங்கமடம் கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் காயங்ந்த தென்னை மரம் ஒடிந்து மாணவி ராமு மீது விழுந்தது. இதில் ராமு பலத்தகாயம் அடைந்தார். ராமுவுக்கு சிகிச்சை அளிக்காததால் ஆத்திரத்தில் பொது மக்கள் ஆசிரியர்களை அறையில் வைத்து பூட்டி வைத்தனர். இதுகுறித்து திருவண்ணைநல்லூர் போலீசார் விசாரணை. | பள்ளி வன்முறை | ஜெயராம் RMA |
| 138. | 12.02.09 | **கடலூர் மாவட்டம் :** சிதம்பரம் அருகே கந்தமங்கலம் காலனியைச் சேர்ந்தவர் ஜெயராஜ். இவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த அரிகிருஷ்ணன் என்பவர் குடும்பத்தினருக்கும் நிலப்பிரச்சனையில் முன் விரோதம். இதில் ஜெயராஜ் மனைவி பரமேஸ்வரியை அரிகிருஷ்ணன் கட்டையால் தாக்கினார். இது குறித்து கிள்ளை போலீசார் வழக்கு பதிந்து அரிகிருஷ்ணனை கைது செய்தனர். | பெண்கள் மீதான வன்முறை | ஜெயராம் RMA |
| 139. | 12.02.09 | **புதுச்சேரி மாநிலம்:** காலாப்பட்டு கனகசெட்டிகுளம் வள்ளலார் நகரில் வசிப்பவர் மோகன் (எ) வெங்கடேசன் (46) இவரதுமகள் நிர்மலா (18) இவர் | பெண்கள் மீதான வன்முறை | ஜெயராம் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காதலித்து வந்தார். பெற்றோர் திட்டியதால் நிர்மலா தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். | | |
| 140. | 12.02.09 | **விழுப்புரம் மாவட்டம் :** திண்டிவனம் அடுத்துள்ள கீழ்மலையனூர் கிராமத்தைச் சேர்ந்தவர் சின்னசாமி மகள் மணிமேகலை (23) அதே ஊரைச் சோந்த சுப்பிரமணி மகள் சக்கரவர்த்தி (24) என்பவருக்கு கடந்த நான்கு வருடங்களாக காதலித்து வந்தனர். திருமணம் செய்வதாக ஆசை வார்த்தைக் கூறி பாலியல் பலாத்காரம் செயங்துள்ளார். சக்கரவர்த்தி திருமணம் செய்ய மறுத்ததால் மனமுடைந்த மணிமேகலை விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். | பெண்கள் மீதான வன்முறை | ஜெயராம் RMA |
| 141. | 12.02.09 | **விழுப்புரம் மாவட்டம் :** விழுப்புரம் அருகே உள்ள சிறுவயலை கிராமத்தைச் சேர்ந்த குப்பன். இவரது மகள் கவிதா (16) இவர் விழுப்புரத்தை அடுத்த முண்டியம் பாக்கத்தில் லிங்கன் என்பவர் வீட்டில் வீட்டு வேலை செய்து வந்தார். லிங்கன் வீட்டு கொட்டகை தீப்பிடித்து எரிந்ததில் கவிதா இறந்தார். இது குறித்து விக்கிவாண்டி போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | ஜெயராம் RMA |
| 142. | 12.02.09 | **கடலூர் மாவட்டம் :** நெய்வேலி என்.எல்.சி நிறுவனத்தில் தொழிலாளியாக வேலை பார்த்து வருபவர் முரளிதரன் (39). இவரது மனைவி தீபா (29). சம்பவ தேதியன்று தீபா மயங்கி கிடந்தார். உடனே தீபாவை நெய்வேலி அரசு மருத்துவமனையில் கொண்டு சென்ற போது இறந்து விட்டதாக கூறினர். இது குறித்து தென்றல் போலீஸ் நிலைத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | ஜெயராம் RMA |
| 143. | 12.02.09 | **கடலூர் மாவட்டம் :** பண்ரூட்டி அருகே உள்ள பெரியகள்ளிப்பட்டு கிராமத்தைச் சேர்ந்தவர் வீரப்பன் மனைவி தனலெட்சுமி. தனலெட்சுமியை மாமனார் திட்டியதால் மனமுடைந்து உடலில் மண்ணெணைய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார். | பெண்கள் மீதான வன்முறை | ஜெயராம் RMA |
| 144. | 12.02.09 | **விழுப்புரம் மாவட்டம் :** திருக்கோவிலூர் அடுத்த அருணாபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் பாலு (25) இவரது மனைவி அலமேலு (22) இரண்டு ஆண்டுகளுக்கு முன் திருமணம். 7 மாத குழந்தை உள்ளது. கணவர் வீட்டில் வரதட்சணைக் கேட்டு அலமேலுவை கொடுமைப்படுத்தி வந்துள்ளனர். இது குறித்து அரகண்டநல்லூர் போலீசார் வழக்கு பதிவு செயங்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை. வரதட்சணை கொடுமை | ஜெயராம் RMA |
| 145. | 12.02.09 | **ஈரோடு மாவட்டம்:** சேவ்வூர் சோமனூரை சேர்நதவர் சிவராமசந்திரன். இவரது மகன் ராஜாராம் (18). இவர் பள்ளி வீட்டுப்பாடத்தை எழுதாமல் வந்ததால் ஆசிரியர் கண்டித்துள்ளார். ராஜாராம் அன்றிலிருந்து மாயமானார். இது குறித்து அன்னூர் காவல் நிலையத்தில் புகார். | பள்ளி வன்முறை | பெருமாள் RMA |
| 146. | 12.02.09 | **நாகப்பட்டினம் மாவட்டம் :** நாகை டவுன் போக்குவரத்து பிரிவு சப்–இன்ஸ்பெக்டராக பணியாற்றுபவர் சாமிநாதன். 2 நாட்களுக்கு முன் அண்ணா சிலை முன்பு வாகனச் சோதனையில் | லஞ்சம் | பெருமாள் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஈடுபட்டிருந்தார். அப்போது ஆட்டோ டிரைவர் பிரபாகரன் லஞ்சம் வாங்கியதாக கைது செய்யப்பட்டார். | | |
| 147. | 12.02.09 | **ஈரோடு மாவட்டம் :** அந்தியூர் அருகேயுள்ள சொக்கநாதன் மலையனூரைச் சேர்ந்தவர். சின்னசெம்பனார் இவரது மகன் விஜயகுமார். இவர் மர்மமான முறையில் அவரது வீட்டில் கொலை செய்யப்பட்டு கிடந்தார். இவரது கொலை வழக்கில் ஒரு போலீசாருக்கு தொடர்பு உள்ளதாக தகவல். இது குறித்து பவானி காவல் நிலையத்தில் புகார். | காவல் வன்முறை | பெருமாள் RMA |
| 148. | 12.02.09 | **வேலூர் மாவட்டம் :** வேலூர் வட்டம் செம்பேடு பகுதயைச் சேர்ந்த தலித் மாணவன் அப்பகுதியைச் சேர்ந்த சாதி வெறியர்களால் தாக்கப்பட்ட சம்பவம். | தலித்துகள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |
| 149. | 13.02.09 | **இராமநாதபுரம் மாவட்டம் :** சாயல்குடி பள்ளிவாசல் தெருவைச் சேர்ந்தவர் நாகராஜன் (57) கொலை வழக்கில் தண்டனை பெற்று மதுரை மத்திய சிறையில் ஆயுள் தண்டனை கைதியாக இருந்து வந்தார். நேற்று முன்தினம் நெஞ்சுவலி ஏற்பட்டு மருத்துவமனைக் கொண்டு செல்லும் வழியில் இறந்தார். கரிமேடு போலீசார் விசாரித்து வருகின்றனர். | காவல் நிலைய மரணம் | தினமலர் |
| 150. | 13.02.09 | **மதுரை மாவட்டம் :** குருவிகாரன் சாலைப்பாலம் அருகே வியாழக்கிழமை குறைமாத சிசு வீசப்பட்டது கண்டறியப்பட்டது. இதையடுத்து மாநகராட்சி ஊழியர்கள் சிசுவை புதைக்க முயன்றபோது கூட்டம் கூடியது. இதனால் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். | சிசு கொலை | தினமலர் |
| 151. | 13.02.09 | **மதுரை மாவட்டம் :** அவனியாபுரம் வ.உ.சி தெருவைச் சேர்ந்தவர் சுரேந்திரநாத் மகன் மணிகண்டன். இவருக்கும் வில்லாபுரம் மீனாட்சி நகரைச் சேர்ந்த சொர்ணமுகிக்கு சில ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடைபெற்றது. சொர்ணமுகியிடம் கூடுதல் வரதட்சணைக் கேட்டும் மற்றும் 2வது திருமணம் செய்வதாக மிரட்டிய கணவன். இது குறித்து திருப்பரங்குன்றம் மகளிர் போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்ஓசை |
| 152. | 13.02.09 | **மதுரை மாவட்டம் :** தொட்டப்பநாயக்கனூரைச் சேர்ந்த அய்யர் (25) இவர் இடையப்பட்டியில் உள்ள கடையில் கறி வாங்கிக் கொண்டிருந்தார். அப்போது அந்த பகுதியை சேர்ந்த ரமேஸ் (22) பிச்சைமணி (24) பிரசாத் (25) ஆகிய மூன்று பேரும் அய்யரை சாதியைச் சொல்லி திட்டியுள்ளனர். இது குறித்து உசிலம்பட்டி காவல் நிலையைத்தில் புகார். | சாதிய வன்முறை | தமிழ்ஓசை |
| 153. | 13.02.09 | **சிவகங்கை மாவட்டம் :** மானாமதுரை சோமசுந்தரம் காலனியைச் சேர்ந்தவர் ஓய்வு பெற்ற ஆறுமுகம் (64). இவரது மகன் அருளாதி (28). மேலூரைச் சேர்ந்த சுப்ரமணியன் மகள் கனிமொழி 2007ல் திருமணம் நடந்தது. திருமணத்தின் போது ஒரு லட்சம் ரூபாய் ரொக்கம் 40 பவுன் நகை | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரதட்சணையாக கொடுக்கப்பட்டது. இவரை மேலும் ஒரு லட்சம் வரதட்சணை கேட்டதாக மதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கனிமொழி புகார். | | |
| 154. | 13.02.09 | **ஈரோடு மாவட்டம் :** ஈரோடு முத்தம்பாளையம் ஹசிங் யூனிட் பகுதியில் சிறுமியர் இருவர் நேற்று காலை டியூசனுக்கு சென்றனர். இவர்களை மாணிக்கம்பாளைய்தைச் சேர்ந்த பாலமுருகன் (45) பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றார். குழந்தைகளின் கதறல் சத்தம் கேட்ட போது மக்கள் தாக்கினர். இது குறித்து சூரம்பட்டி போலீசார் விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | |
| 155. | 14.02.09 | **தேனி மாவட்டம் :** பனைப்புரம் பேரூராட்சியில் ரூ. 4.60 லட்சம் மதிப்பில் சின்டெக்ஸ் குடிநீர் அமைக்கும் பணியில் முடித்து பேரூராட்சி இளநிலை பொறியாளர் கோவிந்தசாமியை கான்டிராக்டர் வனிதா அணுகிய போது பில்லை முடித்து கொடுக்கு 2 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக கோவிந்தராஜ் கைது செய்தார். | லஞ்சம் | தினகரன் |
| 156. | 14.02.09 | **மதுரை மாவட்டம் :** மதுரை அருகே விளாங்குடியைச் சேர்ந்த முத்துராம் பால்ராஜ் (24) இவரது பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர் பாண்டீஸ்வரி (20). இவர்கள் காதலித்து திருமணம் செய்து கொண்டனர். பால்ராஜின் குடும்பத்தார் பாண்டீஸ்வரியை தாக்கிவிட்டு பால்ராஜ்–ஐ அழைத்துச் சென்று விட்டனர். பாண்டீஸ்வரி இது குறித்து சமயநல்லூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 157. | 14.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** ஆரணி வட்டம், ஆடனூர் கிராமம், சேர்ந்த மாணவி திவ்யாவை அப்பள்ளி தலைமை ஆசிரியர் சரோஜினி தாக்கிய சம்பவம். | வகுப்பறை வன்முறை | பாஸ்கர் RMA |
| 158. | 14.02.09 | **மதுரை மாவட்டம் :** மதுரை சின்ன சொக்கிகுளத்தையச் சேர்ந்தவர் அன்னபூரணி (25). அலங்காநல்லூரைச் சேர்ந்தவர் ரமேஷ் (30) ரமேஷ்–ன் குடும்பத்தினர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தப்பட்டார். இது குறித்து தல்லாகுளம் மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை. வரதட்சணை கொடுமை | தினத்தந்தி |
| 159. | 14.02.09 | **மதுரை மாவட்டம் :** சுந்தராஜபுரத்தைச் சேர்ந்தவர் காசிமாயன் இவரது மனைவி வாணிஸ்ரீ (27) இவர்களுக்கு 4 வயதில் ஒரு குழந்தை உள்ளது. இருவரும் ஆந்திராவில் முறுக்கு கம்பெனியில் வேலை செய்கின்றனர். குடும்ப தகராறின் காரணமாக தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 160. | 14.02.09 | **மதுரை மாவட்டம் :** கூடல் புதூர் அருகே உள்ள பெ. கதும்பு கிராமத்தைச் சேர்ந்தவர் ராமு. இவர் இறந்து விட்டார். இவரது மகன் கிருஷ்ணன் தனக்கு பிரித்து வழங்கப்பட்ட சொத்துக்கு தனியாக பட்டா வாங்குவதற்காக கிராம அதிகாரி சுப்ரமணியனிடம் விண்ணப்பித்தார். 3 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் கைது செய்தனர். | லஞ்சம் | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 161. | 14.02.09 | **திண்டுக்கல் மாவட்டம் :** பட்டிவீரன்பட்டி அருகே சொர்ணாபுரம் காலனியைச் சேர்ந்தவர் புஷ்பராணி. இரவது கணவர் சுப்பிரமணி. இவர்களுக்கு முன்பு மகள்கள். சுப்பிரமணி சில மாதங்களுக்குமுன் இறந்து விட்டார். இவரது மாமியார் கொளுந்தனார் முருகன் ஆகியோர் கொடுமைப்படுத்தியதால் இவர் பட்டிவீரன்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கச் சென்றார். போலீசார் அலட்சியப்படுத்தியதால் புஷ்பராணி தானும் விசம் குடித்து தன் குழந்தைகளுக்கும் விசம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 162. | 14.02.09 | **இராமநாதபுரம் மாவட்டம் :** திருவாடனை வத்திரப்பட்டியைச் சேர்ந்தவர் லதா (27) இவருக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளனர். வீட்டுக்கு அருகில் உள்ள தனியர்ர் நூற்பாலையில் உள்ள உணவக கழிவு நீர் மற்றும் இலைகளை மாடு உணவுக்காக எடுத்து வருவார். இதற்காக மில் பின்புறம் சென்றார். இவர் அரிவாளால் வெட்டி கொலை செய்யப்பட்டு கிடந்தார். இதுகுறித்து திருவாடனை போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 163. | 14.02.09 | **காஞ்சிபுரம் மாவட்டம் :** செங்கல்பட்டு அரசு பொது மருத்துவமனையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட குருவன்மேடு கிராமத்தைச் சேர்ந்த ஜெயலட்சுமி என்பவர் மருத்துவர்களின் அலட்சியப் போக்கு காரணமாகத் தனது குழந்தையுடன் இறந்தார். உடலை வாங்க உறவினர்கள் மறுப்பு. | மருத்துவர்களின் அலட்சியம் | ஜனசக்தி |
| 164. | 14.02.09 | **சிவகங்கை மாவட்டம் :** காளையார்கோவில் ஒன்றியம் ஏரிவயல் ஊராட்சிமன்றத் தலைவர் செபந்தியம்மாள் (600 இவர் வேலை உறுதித் திட்டத்தில் முறைகேடு செய்ததாக கைது செய்யப்பட்டார். | முறைகேடு | தமிழ்சுடர் |
| 165. | 14.02.09 | **விருதுநகர் மாவட்டம் :** இராஜபாளையம் பகுதி மொட்டமலை அருகே தோட்டம் வைத்திருப்பவர் வெங்கடேஷ். இவரது தோட்டத்திற்கு தண்ணீர் பாச்ச சென்ற முத்துசாமி மனைவி மகாலட்சுமி அழகுகனி (200 என்பவர் கற்பழிக்க முயன்றதாக ராஜபாளையம் தெற்கு காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |